## அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதா?

‘கும்பமேளா’வில் கூடிய சாமியார் கூட்டம், இந்து அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க, குழு ஒன்றை அமைத்துள்ளது. ‘சம்பவி பீடாதீஸ்வர் ஸ்வாமி ஆனந்த ஸ்வரூப் மகாராஜ்’ இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 2035-ஆம் ஆண்டுக்குள் நடைமுறையில் உள்ள அரசியலமைப்புச் சட்டத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, இந்தியாவை இந்து நாடாக்குவது இந்த சாமியார்களின் திட்டமாம்.

“இந்து நாடு அரசியலமைப்பு வடிவமைப்பின்படி, சபையின் பெயர் நாடாளுமன்றம் அல்ல; இந்து தர்ம பீடமாக மாற்றப்படும். சனாதன தர்மத்தைப் பின்பற்றுவோர் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். ஆங்கிலப் பள்ளிகள் குருகுலங்களாக மாற்றப்படும். அரசு நிதியால் இயங்கும் அனைத்து மதரசா மற்றும் மிஷினரி பள்ளிகளும் இழுத்து மூடப்படும். மனு மற்றும் யாஜ்ஞவல்கியரின் ஸ்மிருதிகள் நடைமுறையில் கொண்டு வரப்படும். தந்தையின் மரணத்திற்குப் பிறகு மகன்கள் மட்டுமே உரிமையாளர் ஆக இருக்க வேண்டும். குருகுலத்தின் மூலம் மட்டுமே நாட்டின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவர்” என்று கூறுகிறார்கள்.

இத்தகைய பிற்போக்குத்தனங்களில் இருந்து விடுபட்டு, கல்வி – வேலைவாய்ப்பில் அனைத்துச் சமூகங்களும் பங்கேற்கத் தொடங்கி, ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது. ஆனால், மீண்டும் பொதுச் சமூகம் கல்வி-வேலைவாய்ப்பில் உரிமையற்றவர்களாக்கப்பட வேண்டும், சிறுபான்மைச் சமூகத்தினரின் உரிமைகள் பறிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். புரட்சியாளர் அம்பேத்கர் இயற்றிய அரசியலமைப்புச் சட்டத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, மதவாத அரசை நிறுவப்போகிறோம் என்று சொல்லுகிற துணிச்சலே மிக ஆபத்தானது. மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட வேண்டியது.

## :ப்ளாஷ்பேக்





ராமலட்சுமி அன்பு கருணாநிதி

### மூன்றாவது தலைமுறையாகக் கழகக் குடும்பம்!

1982-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்துள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்போது, எனது கணவரின் தாத்தா வடுகன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் அவர்கள், எனது கணவரின் பெயர் சூட்டு விழா அழைப்பிதழை, தலைவர் கலைஞர் அவர்களிடம் ‘என்னுடைய பெயரன் பெயர் சூட்டு விழா’ என, வழங்கி இருக்கிறார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. தலைவர் கலைஞர், தளபதி என மூன்றாவது தலைமுறையாக கொள்கைப் பற்று கொண்ட கழகமே குடும்பம் என்று குடும்பமே கழகமாக நாங்கள் இருப்பது பெருமையாக உள்ளது.

**– ராமலட்சுமி அன்பு கருணாநிதி,**
**தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்,**
**பேட்டைப் பகுதி, நெல்லை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### எம்.ஜி.ஆரின் தோல்வி!

28.7.1972 அன்று எம்.ஜி.ஆருக்கு ‘பாரத்’ பட்டம் வழங்கப்பட்டதற்காக பாராட்டு விழா நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு எம்.ஜி.ஆரை வாழ்த்திப் பேசினார் கலைஞர். அப்போது பேசிய எம்ஜிஆர், “முரட்டுக் கதர் போட்டுக்கொண்டு கலைஞரை என் பக்கம் இழுக்க முயன்றேன். ஆனால், அதில் தோற்று, நான் அவர் பக்கம் வந்துவிட்டேன். எனக்கு முதன்முதலாக ‘புரட்சி நடிகர்’ பட்டத்தை வழங்கிய கலைஞரிடம் தோல்வியை ஒப்புக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்” என்றார்.

# நாட்டுடைமை, கலைஞரின் மின்னூல் எண்ணிக்கை!

**நீரை.மகேந்திரன்**



மறைந்த தமிழறிஞர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவர்களின் படைப்புகள் அனைவரிடமும் பரவலாகச் செல்ல வேண்டும் என்கிற வகையிலும், அவர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

நாட்டுடைமை ஆக்கப்படும் நூல்களை மரபுரிமையாகக் கொண்டவர்களுக்குப் பரிசுத்தொகை வழங்கியும், அரசு மரியாதை செய்து வருகிறது. அதன்படி, இதுவரை 188 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, சுமார் 15 கோடி ரூபாய் நூலுரிமைத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்களை, பலருக்கும் எளிதாகச் சேரும் வகையில் அரசு அச்சிடுவதுடன், மின்னூலாகவும் பதிவேற்றம் செய்து வருகிறது. அந்த வரிசையில், சமீபத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட கலைஞரின் படைப்புகள் அனைத்தும் இப்போது, பலராலும் பதிப்பித்து வரப்படுவதுடன், பெரும்பாலான நூல்கள் tamildigitallibrary.in இணையதளம் வழி மின்னூலாகவும் வாசிக்கக் கிடைக்கின்றன.

கடந்த ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில், ‘கலைஞரின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகையின்றி, நாட்டுடைமையாக்கம் செய்யப்படும்’ என அறிவித்தார் முதலமைச்சர் அவர்கள். இதையடுத்து, அவரது அனைத்துப் படைப்புகளும் இப்போது பலரது கைகளுக்கு எளிதாகச் சென்றுள்ளன.

அவரது எழுத்துகளில் புகழ்பெற்ற ‘நெஞ்சுக்கு நீதி’ ‘குறளோவியம்’, ‘ரோமாபுரிப் பாண்டியன்’ ‘திருக்குறள் உரை’ ஆகிய நூல்களைப் பல பதிப்பகங்கள் தரமான கட்டமைப்பில் நூல்களாகக் கொண்டு வந்துள்ளன. அதேநேரத்தில் அந்த நூல்கள் அனைத்தும் மின்னூல்களாகவும் இப்போது அந்த இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

**14 வயதில் தனது இலக்கிய வாழ்வைத் தொடங்கிய கலைஞர் அவர்கள் 92 வயது வரையிலும் எழுதிக்கொண்டே இருந்தார். தனியொரு மனிதராக இத்தனை இலக்கியப் படைப்புகள் வழங்க முடியுமா என வியப்பை ஏற்படுத்தும்.**

54 தொகுப்புகளாக வெளியான **‘கலைஞர் கடிதங்கள்’** உள்பட, பதிப்பில் இல்லாத பல நூல்களும் tamildigitallibrary வழியாக மின்னூலாக்கம் பெற்றுள்ளன. 1970-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்துக்குப் பதிலளித்து ஆற்றிய உரைத் தொகுப்பு, 1982-ஆம் ஆண்டு வெளியான **‘கலைஞர் தொடுத்த கணைகள்’** 1989-ஆம் ஆண்டு வெளியான **‘குணநாயகர் நேரு’** 1995-ஆம் ஆண்டு வெளியான **‘இராவண விழா பேருரைத் தொகுப்பு’** என அச்சிலும் பதிப்பிலும் இல்லாத பல அரிய நூல்களை மின்னூலாக்கம் செய்து, கலைஞரின் படைப்புகளை வாசிப்பதற்குக் கொண்டு வந்துள்ளது tamildigitallibrary. மொத்தமாக 450 நூல்கள் பதிவேற்றம் கண்டுள்ளன.

14 வயதில் தனது இலக்கிய வாழ்வைத் தொடங்கிய கலைஞர் அவர்கள் 92 வயது வரையிலும் எழுதிக்கொண்டே இருந்தார். தனியொரு மனிதராக இத்தனை இலக்கியப் படைப்புகள் வழங்க முடியுமா என வியப்பை ஏற்படுத்தும் அவரது எழுத்துப் பணி. இப்போது, மின்னூலாக்கத்திலும் அவரது நூல்களின் எண்ணிக்கை வியப்பை ஏற்படுத்துகிறது. tamildigitallibrary.in தளத்தில் அவரது நூல்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் செய்யலாம்.

# பொய்ப்பெட்டி

47

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

# நீதியின் வழியே திராவிடத்தின் வலிமை!



***‘சனாதனத்துக்கு எதிராகப் பேசி, நாட்டில் இனப்படுகொலைக்குத் தூண்டிவிடுகிறார்’ என்று பா.ஜ.க.வினரால் குற்றம்சாட்டப்பட்ட வழக்கில் ‘துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிப்படை உரிமைகளை எவ்வகையிலும் மீறவில்லை’ என்று உச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளதே?***

பா.ஜ.க.வினர் ஒருபோதும் உண்மை பேசமாட்டார்கள் என்பதை உச்சநீதிமன்றம் மீண்டும் உறுதிசெய்துள்ளது. தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், **‘தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள்-கலைஞர்கள்’** சங்கத்தின் சார்பில், நடைபெற்ற ‘சனாதன ஒழிப்பு’ மாநாட்டில் பங்கேற்று, சனாதனம் என்பது மக்களை எப்படிப் பிளவுபடுத்தியிருக்கிறது, டெங்கு-மலேரியா போலவே, பிறப்பு ரீதியிலான சாதி வேறுபாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். சனாதனக் கொள்கைகளுக்கு மாற்றான அவருடைய கருத்தை, இந்துக்களுக்கு எதிரான கருத்தாகவும், பிராமணர்கள் போன்ற உயர் சமூகத்தினரைக் குறிவைத்துப் பேசியதாகவும், இனப்படுகொலை செய்ய வேண்டும் என்று பேசியதாகவும், உடனடியாகத் திரித்து வெளியிடும் வேலையை பா.ஜ.க. ஒன்றிய அமைச்சர்கள் முதல், மாநில நிர்வாகிகள் வரை செய்தார்கள்.

**சமூகநீதியும் சமத்துவமுமே எங்கள் கொள்கை என்பதையும், அதற்கு நேர் எதிரானது சனாதனம் என்பதையும், நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமான வாக்குமூலமாகவே தாக்கல் செய்தார். தன் கொள்கை நிலைப்பாட்டில் அவர் உறுதியாக நின்றார்.**

துணை முதலமைச்சர் பேசிய சனாதனம் இந்திய அளவில், விவாதப் பொருளாக்கப்பட்டு, அதையே வட மாநில சட்டமன்றத் தேர்தல்களில் இந்தியா கூட்டணிக்கு எதிரான பிரச்சாரமாகக் கையில் எடுக்கப்பட்டது.

உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராகப் பல வழக்குகளும் நீதிமன்றத்தில் போடப்பட்டன. அப்போது, தன்னுடைய கருத்துக்கு அவர் மன்னிப்பு கேட்டதாக பா.ஜ.க.வினரும் அதன் அடிமைக்கூட்டமும் கூலிப்படையினரும் அவதூறு பரப்பினார்கள். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய கருத்துகள் எந்த அடிப்படையில் தெரிவிக்கப்பட்டன, சனாதன தர்மம் எனச் சொல்லப்படுவது இந்தியாவின் பெரும்பான்மை மக்களை எப்படிப் பிளவுபடுத்துகிறது, சமூகநீதியும் சமத்துவமுமே எங்கள் கொள்கை என்பதையும், அதற்கு நேர் எதிரானது சனாதனம் என்பதையும், நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமான வாக்குமூலமாகவே தாக்கல் செய்தார். தன் கொள்கை நிலைப்பாட்டில் அவர் உறுதியாக நின்றார்.

உச்சநீதிமன்றமும் துணை முதல்வரின் கருத்துகள் அரசியலமைப்புச் சட்டப்படி அடிப்படை உரிமைகளை, எந்த வகையிலும் மீறவில்லை, என்பதையும் அவரது கருத்தில் தவறு இல்லை எனவும் தெரிவித்து, அவருக்கு எதிரான ரிட் மனுக்களை அனுமதிக்க மறுத்துள்ளது. திராவிடத்தின் வலிமையை நீதியின் வழியே நிரூபித்திருக்கிறார், துணை முதலமைச்சர்.

**...வினா தொடரும்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

735




எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.